புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# தமிழ் இலக்கணத்தில் வினாப்பெயர்

*முனைவர் பி. அனிதா,*
*உதவிப்பேராசிரியர்,*
*வள்ளியம்மாள் மகளிர் கல்லூரி,*
*அண்ணாநகர், சென்னை – 102.*

*ஆய்வுச் சுருக்கம்*

*மனித சமுதாயத்தை வளரச் செய்வது கல்வியெனின் மிகையாகாது. கல்வியால் உலகம் முன்னேறிக்கொண்டு வருகிறது. இக்கல்வி சிறப்புற வினாக்கள் கேட்பது இன்றியமையாதது ஆகிறது. ஆதிமனிதன் கால கண்டுபிடிப்புகள் முதல் இன்றைய கண்டுபிடிப்புகள் வரை வினாக்களினாலேயே உலகம் முன்னேற்றப்பாதையில் சென்று கொண்டிருக்கிறது. ஆகவே, கல்வியில் மட்டுமல்ல நம் வாழ்வின் ஒவ்வொரு சூழ்நிலைகளிலும் ஒவ்வொரு மொழி செயல்பாடுகளிலும் வினாக்கள் முக்கிய இடத்தைப் பெறுகிறது. அறியாத ஒன்றை அறிந்து கொள்ளும் பொருட்டும், ஐயம் ஏற்படும் பொழுது ஐயத்தை தீர்த்துக்கொள்ளும் பொருட்டும் வினாக்கள் கேட்கப்படுகிறது. இது மனித வாழ்வியல் நடைமுறைச் சூழலில் கேட்கப்படுவது. கற்றல், கற்பித்தல் சூழலில் மாணவர்களின் அறிவைச் சோதிக்க அறிவினா கேட்கப்படுகிறது. கற்றல், கற்பித்தல். இத்தகைய வினாக்களின் இன்றியமையாமையை தொல்காப்பியர் நன்கு விளக்கியுள்ளார். தொல்காப்பியம் மட்டுமல்லாமல் நன்னூல், முத்துவீரியம், வீரசோழியம் போன்ற நூல்கள் வினாப்பெயர்களைப் பற்றி குறிப்பிட்டுள்ள செய்திகளை இக்கட்டுரை விளக்குகிறது. தொல்காப்பியர் உயர்திணை, அஃறிணை ஆகிய இரு திணைகளுக்கும் உரிய வினாப் பெயர்களைப் பற்றி குறிப்பிட்டு அவை எந்தச் சூழலில் கேட்கப்படுகிறது என்பதையும் விளக்கியிருக்கிறார். இதன் அடிப்படையில் அவை இன்றைய வினாப்பெயர் உருவாவதற்கு வேராக அமைகின்றன என்பனவற்றை இக்கட்டுரை எடுத்து இயம்புகிறது.*

*திறவு சொற்கள்*

*யாவன், யாவள், யாவர், யாது, யார், யாவை*

*ஆய்வு சிக்கல்*

*தற்போதைய சூழலில் வினாக்களின் இன்றியமையாமை கருதி இலக்கணங்களில் கூறப்பட்ட வினாப்பெயர்களை தொல்காப்பியர் வகைப்படுத்தியுள்ள முறை பற்றியும் இன்றைய கற்றல், கற்பித்தல் சூழலுக்கு இவை எவ்வாறு ஆணிவேராக பயன்படுகிறது என்பதையும் அறிவது இக்கட்டுரையின் சிக்கலாகும்.*

*ஆய்வு அணுகுமுறை*

*தொல்காப்பியர் வினாப்பெயர்களை உயர்திணைக்குரியதாகவும் அஃறிணைக்குரியதாகவும் கூறியுள்ளதை விளக்கி கூறுவதால் விளக்கமுறை அணுகுமுறையும் வினாப்பெயர்களை பகுத்துக் கூறுவதால் பகுப்பாய்வு அணுகுமுறையும் நன்னூல், வீரசோழியம், முத்துவீரியம் ஆகியவற்றில் உள்ள வினாப் பெயர்களையும் சேர்த்து தொகுத்துக் கூறுவதால் தொகுப்பாய்வு அணுகுமுறையும் இக்கட்டுரையில் பயன்படுத்தப்படுகிறது.*

*முன்னுரை*

*வினா என்பது வினவுவது அதாவது. ஒன்றைக் கேட்டு அறிந்து கொள்வது ஆகும். வினா என்பதற்கு சேனாவரையர் அறியலுறவினை வெளிப்படுத்துவது வினா என்கிறார். வினா என்ற சொல் கேள்வி என்ற சொல்லாலும் குறிக்கப்பெறுகிறது. கேள்வி என்று சொல்லுக்குத் தமிழ்ச்சொல் பேரகராதி 14 பொருட்களைத் தருகிறது. இதில் கல்வி, நூற்பொருள், கேட்டல், வினா, வேதம், நூல், சொல் ஆகியவை கற்றல் கற்பித்தலோடு தொடர்புடையவை ஆகும். வினா என்ற சொல்லுக்கு முத்துவீரியம் 'கடாவல்' என்று கூறுகிறது. வினாவிற்கு உரிய எழுத்துக்களை நன்னூலர் ஐந்து வினா எழுத்துக்களாகவும் தொல்காப்பியர் மூன்று வினா எழுத்துக்களாகவும் குறிப்பிட்டுள்ளார். தொல்காப்பியர் கூறியுள்ள இந்த மூன்று வினா எழுத்துக்கள் ஆம் இல்லை என்ற அமைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது. வினாப் பெயர்கள் மொழியின் செயல்பாட்டிற்கு உதவி புரிகின்றன. அந்த வகையில் தொல்காப்பியர் வினாப் பெயர்களை உயர்திணைக்குரிய வினாப் பெயர்கள், அஃறிணைக்குறிய வினாப் பெயர்கள் இருதிணைக்கும் பொதுவான வினாப் பெயர் என்ற மூன்று அடிப்படையில் வினாப் பெயர்களை வகைப்படுத்தி உள்ளார் அவற்றை இக்கட்டுரையில் விரிவாக காணலாம்.*

*உயர்திணை வினா பெயர்கள்*

*ஐம்பால் உயர்திணைக்குரிய பால்கள் ஆண்பால், பெண்பால், பலர்பால் ஆகிய மூன்று பால்கள் ஆகும். இந்தப் பால்களுக்குரிய வினாப் பெயர்களாக ஆண்பாலுக்கு யாவன் என்றும் பெண்பாலுக்கு யாவள் என்றும் பலர்பாலுக்கு யாவர் என்றும் தொல்காப்பியர் கூறியுள்ளார்.*

*"யாவன் யாவள் யாவர் என்னும்*
*ஆவியின் மூன்றோ டப்பதினைந்தும்*
*பாலரி வந்த உயர்திணைப் பெயரே" (தொல்.சொல்.159)*

*இவ்வினாப் பெயர்களின் வேர்ச்சொல் யாவ் என்பதிலிருந்து தோன்றியது ஆகும். யாவ் என்ற வேர்ச்சொல் பற்றி "சுட்டு வேர்ச் சொற்களைப் போன்று யாவ் என்பதை வேர்ச்சொல்லாகவும் யா என்பதை அதன் மாற்று வடிவமாகவும் கொண்டு வினாப் பெயர்களை பகுத்துப் பார்க்கலாம்" என்று சுபாஷ் சந்திர போஸ் (2018 :154) கூறுகிறார். மேலும். யாவ் என்ற வேர் சொல்லுக்கு இருவகையான பொருள் உண்டு என்பதை அவர் கூறுகிறார். ஒன்று பொதுச்சொல் இரண்டு பன்மை உணர்த்தும் வேர்ச்சொல் இதில் பன்மை உணர்த்தும் வேர்ச்சொல் என்று அவர் கூறியிருப்பது யாவர் மற்றும் யார் என்பது ஆகும். யாவர் என்பது பலர்பால் வினாப் பெயர் யார் என்னும் சொல் யாவ் என்பதன் வேர் சொல்லின் வகரம் கேட்டு பலர்பால் விகுதியான ரகரம் சேர்ந்த வடிவமாகும். யாவன், யாவள், யாவர் என்னும் உயர்திணை வினாப் பெயர்களில் காணப்பெறும் யாவ் என்ற வேர்ச்சொல் பன்மை உணர்த்தாத போது வேர்ச்சொல் யாவ் - அன், அள், அர் என்ற விகுதியைப்பெற்று யாவன், யாவள், யாவர் என்று பெயர் பெறுகிறது.*

*யாவர் என்பதின் இன்னொரு மருவு வினாப் பெயராக யார் என்பதை தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். என்னும் வினா பெயரில் உள்ள இடைவகரம் கெட்டு யார் என்று வரும் என்பதை,*

*"பலரறி சொல் முன் யாவர் என்னும்*
*பெயரிடை வகரம் கெடுதலும்" (தொல்.சொல்.173)*

*எனும் நூற்பாவில் குறிப்பிடுகிறார். நன்னூலார்,*

*"யாரென் வினாவினை குறிப்புயர் முப்பால்" (நன்.349)*

*என்ற நூற்பாவில் யார் என்பது உயர்திணை முப்பாலுக்கும் பொது வினையாக வரும் என்று கூறுகிறார். யார் என்பது ஆர் எனவும் பின்பு விகாரப்பட்டு வந்துள்ளது. யார் என்னும் பலர் பால் வினாப் பெயர் சங்க இலக்கியத்தில்,*

*"யார் கொல் அளியர் தாமே" (புறம். 52:8)*
*"யார் மகள் கொல்" (நற் 8:4)*

*போன்ற பாடல்களில் அரிதாகவே இடம் பெற்றுள்ளன.*

*அஃறிணை வினாப் பெயர்*

*அஃறிணை என்று சுட்டப்பெறுவது ஒன்றன்பாலும் பலவின்பாலும் ஆகும். இதில் ஒன்றன்பாலுக்குரிய வினாப் பெயர்கள் வேராகவும் பலவின்பாலுக்குரிய வினாப் பெயர்கள்*

*வேராகவும் இரண்டிற்கும் பொதுவாக உள்ள வினாப் பெயர்களையும் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். உயர்திணை, அஃறிணைக்குரிய வினாப் பெயரும் இரண்டுக்கும் பொதுவாகக் கூறப்பட்டுள்ளன.*

*ஒன்றன்பால் வினாப்பெயர்*

*தொல்காப்பியர் ஒன்றன்பால் வினாப்பெயராக யாது என்பதைக் குறிப்பிட்டுள்ளார்.*

*"யாதுயா, யாவை என்னும் பெயரும்*
*ஆவயின் மூன்றோ டப்பதி னைந்தும்*
*பாலறி வந்த அஃறிணைப் பெயரே" (தொல்.சொல். 164)*

*என்று ஒன்றன்பால் மற்றும் பலவின் பாலுக்குரிய வினாப் பெயர்களைத் தொல்காப்பியர் கூறுகிறார். இதில், யாது என்ற வினாப்பெயர் ஐயங்களைத் தீர்ப்பதற்கு பயன்படுத்தப்படுகிறது.*

*"யாது எவன் என்னும் ஆயிரு கிளவியும்*
*அறியாப் பொருள்வயின் செறியத் தோன்றும்" (தொல். சொல். 31)*

*"அவற்றுள்,*
*யாது என வரூஉம் வினாவின் கிளவி*
*அறிந்த பொருள்வயின் ஐயம் தீர்தற்குத்*
*தெரிந்த கிளவி யாதலும் உரித்தே" (தொல்.சொல். 32)*

*என்ற நூற்பா வழி தொல்காப்பியர் கூறுகிறார். இதே, கருத்தை வீரசோழியமும்,*

*"யாதெவ னறியாப் பொருளோடு சிவனும் (வீரசோழியம்.708)*

*"அவற்றுள்*
*யாதுஐய நீக்கற் பொருளொடு நிலையும்" (வீரசோழியம். 709)*

*என்று கூறுகிறது.*

*உதாரணம் இம்மரங்களுள் தேக்கு மரம் யாது? என்பதில் யாது என்பது ஐயத்தை தீர்ப்பதற்காகப் பயன்படுகின்ற வினாப் பெயராகும். மேலும், யாது பற்றி தொல்காப்பியர்*

*"யாது என் இறுதியும்…….*
*………..உருவியல் நிலையும்" (தொல் சொல்: 423)*

*என்ற நூற்பாவில் யாது என்ற வினாப்பெயர் அன் சாரியைப்பெற்று யாது+அன்= யாதன் என வரும் என குறிப்பிடுகிறது. ஆக யாது என்ற ஒன்றன்பால் வினாப்பெயர் ஐயம் தீர்க்கக்கூடிய பொருளில் வழங்கப்பட்டுள்ளதை மேற்காண் விளக்கங்கள் காட்டுகிறது கற்றல் கற்பித்தல் சூழலில் யாது என்ற வினாப்பெயர் பரவலாகக் கேட்கப்பட்டுத் தற்போது வழக்கத்தில் உள்ளது.*

*தொல்காப்பிய எழுத்ததிகாரத்தில் யாது என்ற வினாப்பெயரின் இடையில் வகரம் வருதலும் உண்டு என குறிப்பிடுகிறார். இது மரூஉப் பெயர் ஆகும்.*

*"ஒன்றறி சொல்முன் யாதென் வினாவிடை*
*ஒன்றிய வகரம் வருதலும்" (தொல். எழுத்து. 173)*

*என்ற சூத்திரத்தில் ஒன்றனை அறியும் சொல் முன்னர் யாது என்னும் வினா மொழியிடை உயிரோடு பொருந்திய வகரம் வருதல் மரூஉப்பெயர் என்கிறார்.*

*உதாரணம்: அது யாவது?*

*பலவின்பால் வினாப்பெயர்*

*பலவின்பால் வினாப்பெயராக யார், யாவை, யாவற்றைப் போன்ற வினாப் பெயர்களைத் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். யாவை என்னும் வினாப்பெயர் பன்மையை உணர்த்தக் கூடியது. படர்க்கை வினாப்பெயராக வரும். யாவை ஒரு ஆக்கப் பெயர் என்று சா. சுபாஷ் சந்திரபோஸ் குறிப்பிடுகிறார். மேலும் பன்மை சுட்டுக்கள் அவ் இவ், உவ் என்பவற்றிலிருந்து அவை இவை உவை வளர்ச்சியடைந்ததைப்போல இதுவும் விகுதி ஐ பெற்றுத் தோன்றிய வடிவமாகும். யாவ் + ஐ = யாவை என்று விளக்கியுள்ளார். மேலும் யா என்ற வினாப்பெயர் ஆகார ஈற்று பெற்று யாவற்றை என வருகிறது என்பதை தொல்காப்பியர் "யாவின் வினாவும் ஆயியல் திரியாது" (தொல்.சொல்.176) என்ற சூத்திரத்தின் வழி விளக்குகிறார்.*

*"யாவென் வினாவின் ஐயென் இறுதியும்*
*ஆயியல் திரியா தென்மனார் புலவர்*
*ஆவயின் வகரம் ஐயொடுங் கெடுமே" ( தொல். எழுத்து. 179)*

என்பதில் யாவை என்ற வினாச் சொல்லும் வற்றுச்சாரியைப் பெறும் என அறிவுடையோர் கூறுவர். அவ்விடத்து வகரம் ஐயுடன் கெடும் எனத் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார்.

யாவை + ஐ = யாவற்றை

மேலும், யா வினாமொழி இயல்பாகும் எனத் தொல்காப்பியம் எழுத்ததிகாரத்தில் 428ல் குறிப்பிட்டுள்ளார். யாங்கு என்ற சொல் இயல்பாக முடியும்.

மேற்குறிப்பிட்டுள்ள அஃறிணைப் பெயர்களான யாது, யாவை, யாவற்றை ஆகியவை அஃறிணைக்குரிய வினாப்பெயர்கள். இவை தற்போது பள்ளி, கல்லூரி வினாத்தாள்களில் வினாப்பெயர்களாக இடம்பெற்று வருகின்றன.

பிற வினாப்பெயர்கள்

உயர்திணை, அஃறிணை வினாப்பெயர்களாக கூறியதைத் தவிர்த்து மேலும், சில வினாப்பெயர்களை கூறுகிறார். அதுமட்டுமல்லாமல் இரண்டு திணைகளுக்கும் பொதுவான வினாப்பெயராக எவன் என்ற குறிப்புமுற்றை குறிப்பிடுகிறார்.

அகத்திணை மருங்கின் இருபாற் கிளவிக்கும்
ஒக்கும் என்ப எவனென் வினாவே” ( தொல்.சொல். 215)

எவன் என்ற குறிப்புமுற்றை தொல்காப்பியர் உயர்திணைக்கும் அஃறிணைக்கும் பொதுவான வினாப்பெயராக குறிப்பிடுகிறார். எவன் என்பது என் என்றும் என்னை என்றும் என்ன என்றும் மருவி தற்பொழுது வழக்கத்தில் இருந்து வருகிறது.

எகர என்ற வினாப்பெயர் பற்றி தொல்காப்பியர் இரண்டு இடங்களில் கூறியிருக்கிறார்.

எகர முதல் வினாவின் இகர இறுதியும் (தொல்.எழுத்து.160)
எகர முதல் வயினும் (தொல்.எழுத்து. 35)

எனச் சில இடங்களில் தொல்காப்பியர் எகர வினாப்பெயரைப் குறிப்பிட்டுச் சென்றுள்ளார். எகரத்தை முதலாகக் கொண்டு தற்காலத்தில் பல வினாப்பெயரடைகள் தோன்றி வழக்கத்தில் உள்ளன. கல்லூரி வினாத்தாள்களிலும் எகர வினாப்பெயர்கள் பல இடம்பெற்ற வருகிறது. எந்தப் பையன், எவ்வளவு, எத்தனை, எங்ஙனம் போன்ற வினாப்பெயர்கள் எகர வடிவங்களாகக் குறிப்பிடப்படுகின்றன.

வினாப்பெயர்களை அடி வினா, ஒட்டு வினா என இரண்டாகப் பிரித்து காணலாம்

யார், யாது, யாவது போன்றவை அடி வினா
ஆ, ஏ, ஓ போன்றவை ஒட்டு வினா

என இரண்டு வினா அமைப்புகள் தொல்காப்பியத்தில் இடம்பெற்றுள்ளதைக் காண முடிகிறது. எ என்பதன் வினாப்பதிலாகத் தற்பொழுது என்ன, எது, எங்கே, எப்படி, ஏன், எப்போது போன்ற பல வினா அடைகள் வழக்கத்தில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. “அடி வினா வாக்கியங்களாக யார், எவர், எவன், என்ன, எது, எவை போன்ற வினா பெயர்களையும் எந்த, எத்தனாவது, எத்தனை, எவ்வளவு, எப்பேர்பட்ட அல்லது எப்படி உள்ள (எத்தகைய எம்மாதிரி போன்ற) என்ன போன்ற வினாப் பெயரடைகளையும் எத்தனாவது, எங்கு, எப்படி, எப்போது போன்ற வினா வினையடிகளையும் உள்ளடக்கியவை என்று சா.அகத்தியலிங்கம் (2021:298) கூறுகிறார்.

இத்தகைய வினாக்கள் இரண்டு மதிப்பெண் வினாக்களில் பரவலாகக் கேட்கப்பட்டு வருகிறது.

முடிவுரை

தொல்காப்பியர் வினாப்பெயர்களை உயர்திணை ஆண்பால், பெண்பால், பலர்பாலுக்குரிய வினாப்பெயர்களாக யாவன், யாவள், யாவர் என்றும் யார் என்ற குறிப்பு முற்றையும் அஃறிணைக்குரிய வினாப்பெயர்களாக யாது, யாவை, யாவற்றை என்ற வினாப்பெயர்களை விளக்கிக் கூறியுள்ளார். மேலும், இருதிணைக்கும் பொதுவாக எவன் என்ற வினாப்பெயரை குறிப்பிடுகிறார். இது தற்பொழுது என் எனவும் என்னை எனவும் என்ன எனவும் மருவி வழங்கப்படுகிறது. இன்று வழக்கில் எகரத்தின் பெயரடை பெயர்களும் வினையடை வினாப்பெயர்களும் வழக்கத்தில் அதிகளவில் பயன்பாட்டில் உள்ளன. இதில், தொல்காப்பியர் கூறிய யார், யாது, யாவை போன்ற வினாப்பெயர்களும் பெயரடை வினாப்பெயர்களும் வினையடை வினாப்பெயர்களும் கூறு, எழுது, விளக்கு போன்ற ஏவல் சொற்களும் கூறுக, விளக்குக, எழுதுக, வரைக போன்ற வியங்கோள் சொற்களும் வினாப்பதிலிகளாக கல்லூரி வினாத்தாள்களில் தற்போது வழக்கத்தில் பயன்பாட்டில் உள்ளது. இவை அனைத்திற்கும்

தொல்காப்பியரின் வினாப்பெயர் பாகுபாடு அடித்தளமாக அமைகிறது என்பதை இக்கட்டுரை பகுத்து தொகுத்து விளக்கி கூறியுள்ளது.

மேற்கோள் நூலகள்


1. *அகத்தியலிங்கம் ச, 2021, தமிழ்மொழி அமைப்பியல், சிதம்பரம் - 608001, மெய்யப்பன் பதிப்பகம்.*
2. *இளவழகன் கோ, (ப.ஆ)., 2000, தொல்காப்பியம் சொல்லதிகாரம் சேனாவரையம், சென்னை-17: தமிழ்மண் பதிப்பகம்.*
3. *கணேசையர் பதிப்பு., 2007, தொல்காப்பியம் சொல்லதிகார மூலமும் சேனாவரையருரையும், சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.*
4. *சுந்தரமூர்த்தி கு, (ப.ஆ)., 1972, முத்துவீரியம், கழக வெளியீடு.*
5. *சுபாஷ் சந்திரபோஸ் ச, 2018, இலக்கணப் பாகுபாட்டில் மூவிடங்கள், சென்னை – 98, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.*
6. *1982, தமிழ்ச்சொல் பேரகராதி (தொகுதி- 2), சென்னை.05: சென்னைப் பல்கலைக்கழகம்.*
7. *1982, தமிழ்ச்சொல் பேரகராதி (தொகுதி- 4), சென்னை.05: சென்னைப் பல்கலைக்கழகம்.*
8. *1984, நன்னூல் காண்டிகையுரை, சென்னை.108: கழக வெளியீடு.*
9. *2000, வீரசோழியம், சென்னை.05: கழக வெளியீடு.*


********* ********* ********** ********* ********* ********** ********** **********